உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# மஹா கந்த சஷ்டி விழாவிற்கான திருப்பாடல்களும் திருப்பதிகங்களும்

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தெய்வவணக்கப் பாடல்கள் | 2 |
| | அருணகிரிநாதர் துதி, கந்தர் அலங்காரம், | |
| | திரு அருணைத் திருப்புகழ், செக்கர்வேளிறுமாப்பு | |
| 2. | குமாரஸ்தவம் | 3 |
| 3. | பகை கடிதல் | 4 |
| 4. | அனவரத பாராயண அஷ்டகம் | 5 |
| 5. | அட்டாட்ட விக்ரக லீலை | 6 |
| 6. | அருளானந்த லகரி | 8 |
| 7. | முதல்வன் புராண முடிப்பு | 11 |
| 8. | திருத்தொடையல் | 12 |
| 9. | சஷ்டி வகுப்பு | 19 |
| 10. | தங்க ஆனந்தக் களிப்பு | 28 |
| 11. | கந்தர் அனுபூதி | 29 |
| 12. | நவவீரர் நவரத்தினக் கலிவிருத்தம் | 35 |
| 13. | சகஸ்ரநாமார்ச்சனை, குமாரஸ்தவம், சோடசம் | 36 |
| 14. | போற்றி விண்ணப்பம் | 37 |
| 15. | நைவேத்தியம் திருத்தொடையல் (1, 8, 30 பாடல்கள்) | |
| 16. | பலகிரி | 39 |
| 17. | பிழை பொறுக்க முறையீடு | 40 |
| 18. | திரு ஆவினன்குடித் திருப்புகழ் (நாதவிந்து கலாதி) | 42 |
| 19. | திருக்கந்தர் திருப்பல்லாண்டு | 43 |
| 20. | வாழ்த்து (விழுமிய பொருளாய் நாளும்) | 45 |
| 21. | மஹாதீபம் (அஸுரகுலமர்த்தநாய) | 46 |
| 22. | கட்டியம் | 46 |
| 23. | இறை ஆசி பெறுதல் (வேதநாயக) | 46 |

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# அருணகிரிநாதர் துதி

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அருவமொரு நான்காகி யுருவமொரு
நான்காகி யறையி ரண்டும்
மருவியுள வுருவருவ மொன்றாகி
முத்திறமும் வழுத்த வொண்ணாப்
பெருவெளிக்கு மப்பாலா யுள்ளபொரு
ளீதெனவே பெரிதுஞ் சேயோன்
ஒருவனையே புகழ்ந்தவரு ளருணகிரி
சேவடிப்போ துளத்துள் வைப்பாம்.

– தகராலயரகசியம்

திருவடியும் தண்டையும் சிலம்பும் சிலம்(பு) ஊடுருவப்
பொரு வடி வேலும் கடம்பும் தடம் புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்கள் ஆறும் மலர்க் கண்களும்
குரு வடிவாய் வந்து என் உள்ளம் குளிரக் குதிகொண்டவே

– கந்தர் அலங்காரம்

# திருவருணை

**தனதனனத் தனதான தனதனனத் தனதான**

இரவுபகல் பலகாலும் இயல்இசைமுத் தமிழ்கூறித்
திரம்அதனைத் தெளிவாகத் திருவருளைத் தருவாயே
பரகருணைப் பெருவாழ்வே பரசிவதத் துவஞானா
அரன்அருள்சற் புதல்வோனே அருணகிரிப் பெருமாளே.

– திருப்புகழ்

கங்கையென் சுதனே யென்னக் கார்த்திகை மதலா யென்னச்
சங்கரி மகனே யென்னச் சங்கரன் குருவே யென்ன
மங்கைய ரிருவோ ருந்தூ மணத்திருத் தலைவா வென்னப்
புங்கவர் பரமா வென்னப் பொலிசிவ னடிபோற் றுவலே.

– செக்கர்வேளிறுமாப்பு

உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# குமாரஸ்தவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஓம் ஷண்முக | பதயே நமோ நம: |
| 2. | ஓம் ஷண்மத | பதயே நமோ நம: |
| 3. | ஓம் ஷட்க்ரீவ | பதயே நமோ நம: |
| 4. | ஓம் ஷட்கிரீட | பதயே நமோ நம: |
| 5. | ஓம் ஷட்கோண | பதயே நமோ நம: |
| 6. | ஓம் ஷட்கோச | பதயே நமோ நம: |
| 7. | ஓம் நவநிதி | பதயே நமோ நம: |
| 8. | ஓம் சுபநிதி | பதயே நமோ நம: |
| 9. | ஓம் நரபதி | பதயே நமோ நம: |
| 10. | ஓம் ஸுரபதி | பதயே நமோ நம: |
| 11. | ஓம் நடச்சிவ | பதயே நமோ நம: |
| 12. | ஓம் ஷடக்ஷர | பதயே நமோ நம: |
| 13. | ஓம் கவிராஜ | பதயே நமோ நம: |
| 14. | ஓம் தபராஜ | பதயே நமோ நம: |
| 15, | ஓம் இஹபர | பதயே நமோ நம: |
| 16. | ஓம் புகழ்முநி | பதயே நமோ நம: |
| 17. | ஓம் ஜயஜய | பதயே நமோ நம: |
| 18. | ஓம் நயநய | பதயே நமோ நம: |
| 19. | ஓம் மஞ்சுள | பதயே நமோ நம: |
| 20. | ஓம் குஞ்சரீ | பதயே நமோ நம: |
| 21. | ஓம் வல்லீ | பதயே நமோ நம: |
| 22. | ஓம் மல்ல | பதயே நமோ நம: |
| 23. | ஓம் அஸ்த்ர | பதயே நமோ நம: |
| 24. | ஓம் சஸ்த்ர | பதயே நமோ நம: |
| 25. | ஓம் ஷஷ்டீ | பதயே நமோ நம: |
| 26. | ஓம் இஷ்டி | பதயே நமோ நம: |
| 27. | ஓம் அபேத | பதயே நமோ நம: |
| 28. | ஓம் ஸுபோத | பதயே நமோ நம: |
| 29. | ஓம் (வ்) வியூஹ | பதயே நமோ நம: |
| 30. | ஓம் மயூர | பதயே நமோ நம: |
| 31. | ஓம் பூத | பதயே நமோ நம: |
| 32. | ஓம் வேத | பதயே நமோ நம: |
| 33. | ஓம் புராண | பதயே நமோ நம: |
| 34. | ஓம் (ப்)பிராண | பதயே நமோ நம: |
| 35. | ஓம் பக்த | பதயே நமோ நம: |
| 36. | ஓம் முக்த | பதயே நமோ நம: |
| 37. | ஓம் அகார | பதயே நமோ நம: |

38. ஓம் உகார பதயே நமோ நம:
39. ஓம் மகார பதயே நமோ நம:
40. ஓம் விகாச பதயே நமோ நம:
41. ஓம் ஆதி பதயே நமோ நம:
42. ஓம் பூதி பதயே நமோ நம:
43. ஓம் அமார பதயே நமோ நம:
44. ஓம் குமார பதயே நமோ நம:

## பகைகடிதல்

### தரவுகொச்சகக்கலிப்பா (இசை)

### அடியொன்றற்குப்பதினெட்டக்கரம்

### தனதன தனதனனா தனதன தனதனனா

திருவளர் சுடருருவே சிவைகர மமருருவே
அருமறை புகழுருவே யறவர்க டொழுமுருவே
இருடபு மொளியுருவே யெனநினை யெனதெதிரே
குருகுகள் முதன்மயிலே கொணர்தியு னிறைவனையே. 1

மறைபுக ழிறைமுனரே மறைமுதல் பகருருவே
பொறைமலி யுலகுருவே புனநடை தருமுருவே
இறையிள முகவுருவே யெனநினை யெனதெதிரே
குறைவறு திருமயிலே கொணர்தியு னிறைவனையே. 2

இதரர்கள் பலர்பொரவே யிவணுறை யெனதெதிரே
மதிரவி பலவெனதேர் வளர்சர ணிடையெனமா
சதுரொடு வருமயிலே தடவரை யசைவுறவே
குதிதரு மொருமயிலே கொணர்தியு னிறைவனையே. 3

பவநடை மனுடர்முனே படருறு மெனதெதிரே
நவமணி நுதலணியோர் நகைபல மிடறணிமால்
சிவணிய திருமயிலே திடனொடு நொடிவலமே
குவலயம் வருமயிலே கொணர்தியுனிறைவனையே. 4

அழகுறு மலர்முகனே யமரர்கள் பணிகுகனே
மழவுருவுடையவனே மதிநனி பெரியவனே
இழவில ரிறையவனே யெனநினை யெனதெதிரே'
குழகது மிளிர்மயிலே கொணர்தியு னிறைவனையே. 5

இணையறு மறுமுகனே யிதசசி மருமகனே
இணரணி புரள்புயனே யெனநினை யெனதெதிரே
கணபண வரவுரமே கலைவுற வெழுதருமோர்
குணமுறு மணிமயிலே கொணர்தியு னிறைவனையே 6

எளியவெ னிறைவகுகா வெனநினை யெனதெதிரே
வெளிநிகழ் திரள்களைமீன் மிளிர்சினை யெனமிடைவான்
பளபள வெனமினுமா பலசிறை விரிதருநீள்
குளிர்மணி விழிமயிலே கொணர்தியு னிறைவனையே. 7

இலகயின் மயின்முருகா வெனநினை யெனதெதிரே
பலபல களமணியே பலபல பதமணியே
கலகல கலவெனமா கவினொடு வருமயிலே
குலவிடு சிகைமயிலே கொணர்தியு னிறைவனையே. 8

இகலறு சிவகுமரா வெனநினை யெனதெதிரே
சுகமுனி வரரெழிலார் சுரர்பலர் புகழ்செயவே
தொகுதொகு தொகுவெனவே சுரநட மிடுமயிலே
குகபதி யமர்மயிலே கொணர்தியு னிறைவனையே. 9

கருணைபெய் கனமுகிலே கடமுனி பணிமுதலே
அருணைய னரனெனவே யகநினை யெனதெதிரே
மருமல ரணிபலவே மருவிடு களமயிலே
குருபல வவிர்மயிலே கொணர்தியு னிறைவனையே. 10

*இப்பதிகத்தை காலை, மாலை பூசித்துப் பத்தி பிறங்கப் பாடுவோர் திருமயில்மீது செவ்வேட் பரமனைத் தரிசிப்பர், பகையை வெல்வர், சண்முக கவச பாராயணத்திற்கு இது வேறாம்.*

## அனவரத பாராயணாஷ்டகம்

### கலிவிருத்தம் பண் – முதிர்குறிஞ்சி.

1. மன்றெனும் பதியுறை மழவிப முகவனு
நன்றெனும் பிரணவ வவனிளை ஞனுமறை
தொன்றெனும் பொருளெனச் சுடர்சிவ னுமுமையு
மொன்றெனும் பெரியவ ருயர்பதம் பணிவேன்.

2. அள்ளுலை யாப்படை யறுமுக வனுமனந்
துள்ளுலை வோட்டுதண் சுடரணி பரமனும்
வள்ளுலை யாக்கிரி மகளு மைங் கரனுமெ
னுள்ளுலை யாப்பொரு ளொன்றெனத் தொழுதேன்.

3. ஆதித்தன் மதியன லாகுமுந் நயனனஞ்
சோதித்தண் முகவுமை தோமிலைங் கரன்முரண்
காதித்தன் களிதரு கடம்பனொன் றெனுநிச
மோதித்தண் ணளிமிக வுறுதுயர் களைவேன்.

4. மயல்களை சிவையையு மதகரி முகனையு
மயல்களை யயிலர சனையுமொன் னலர்கடம்
மியல்களை சிவனையு மொருபொரு ளெனினிடர்ப்
புயல்களை யருளுறு மெனநனி புகழ்வேன்.

5. மாலொடு விதியறி யாதசெம் மரைமலர்க்
காலொடு நவிரமு மாரிறை களியுமை
வேலொடு வருகுக வேள்கள பமுகன்மெய்
வாலொடு மிளிரறி வினிதென மகிழ்வேன்.

6. திருவருள் புரியுமைங் கிலீந்திரி புரைபரை
குருவருள் புரிசௌங் கிரீஞ்சிவை குகனிட
ரொருவருள் புரிபத விநாயக னுயர்சிவ
னருவருள் புரிபதி யாயெனைக் காக்க.

7. வாணுதன் மடப்பிடி மலைப்புன மானலம்
பேணுதல் விழிச்சர வணபவப் பெருந்தகை
மாணுத னயனகங் கணபதி வளரனல்
காணுத லரனுமை யருளெனைக் காக்க.

8. பாமகண் மறைபுக ழோங்கண பதியெழிற்
சீமக ணனிபுக ழோநமச் சிவாயவை
பூமகள் புகழுமை பூம்புகழ்க் கவியிறை
யேமக கனவருள் காத்தருள் கெனையே.

## அட்டாட்டவிக்கிரகலீலை

### நாற்பத்தெண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

சந்திரசேகரமர்த்தநாரீ சுரஞ்
சக்கரப்பிரதானம்
தக்ஷிணமூர்த்தமிலிங்கம் லிங்கோற்பவந்
தக்ஷயக்கியபங்கம்
சந்தியினிர்த்தனஞ்சந்ததநிர்த்தனஞ்
சண்டேசாநுக்ரகம்
சலந்தரவதமகொராஸ் திரமேகப
தம்மசுவாரூடம்
சத்யசதாசிவம்மிக்கசதாசிவந்
தகுலகுளேசுவரம்
சகஜசுகாசனங்கூர்மசங்காரமச்
சாரிவராஹாரி
சற்குருமூர்த்தமுமேசமுமாபதி
ஜயபுஜங்கத்ராசம்

சார்த்தூலஹரிபைரவங்கலியாணசுந்
தரம்வடுகங்கிராதம்

சுந்தரவிருஷபவூர்திவிஷாபஹ
ரணஞ்சுவராபக்நம்
துகளறு க்ஷேத்திரபாலகந்தொல்கரு
டாந்திகம்முகலிங்கம்
துங்ககங்காதரங்கங்காவிஸர்ஜநஞ்
சுபசோமாஸ்கந்தம்
சூரஸிம்ஹாரி கமாரியமாந்தகஞ்
சுசி மாணவபாவம்
சுபகரபிரார்த்தனை மூர்த்தநறுந்திரி
புராந்தகஞ்சுரர்பரசும்
சுமுககங்காளமிரக்தபிக்ஷைப்பிர
தானமிருஞ்சுடரே
சுடர்கவுரீ வரப்பிரதம்மஹாபா
சுபதசொரூபமணி
தோன்று புஜங்கலளிதம்ரிஷபாந்திகந்
தோமறுகஜயுத்தம்

விந்தை விளம்புகஜாந்திகம் வீணை
தயங்குதக்ஷிணமூர்த்தம்
மேதகயோகவினோதமதாக
விளங்குதக்ஷிணமூர்த்தம்
விமலபிக்ஷாடனங்கவலையுத்தாரணம்
வேதகணம்புகழும்
விதிசிரகண்டனங்கவுரிலிலாசமந்
விதமெழிலரியர்த்தம்
வீரபத்திரந்திரிமூர்த்திமுப்பாதம
ஹாவேதாளிநடம்
வெருவறுமேகபதத்திரியுருவாய்
விளம்பறுபதுநான்கும்
விலாசவளிப்புநிமித்தமெடுத்தவொர்
மெய்ப்பொரு ளெதுவதுவே
விண்ணவர்மண்ணவர் கண்ணவர்யாவரும்
வீடருளாயெனவே

வந்தனைபுரியவிருந்துளனீயென
வண்டமிழான்மனசான்
வாழ்த்திவணங்கெனையாளவெனிருதய
மலரிலெழுந்தருளாய்
மந்திரநாயகதந்திரநாயக
மங்களநாயகவோம்
மயதவரீ சுரபரமகுஹேசுர
வசனமனாதீத
வரதக்ருபாகரகுமரபராபர
வரைவறுஷாட்குண்ய
வஸ்துவெனற்புதசத்தியவித்தக
மரணமொடயனமிலா
வானவஞானநபோமணியேதிரு
மாலயனறியாவோர்
மாமலையின் பெயரான்குருநாதவென்
மருடெறுமாமுனியே.

*கலியுக ஆண்டு 5000—ல் நிகழ் விளம்பி வருடத்தில், **பாம்பன்** : **ஸ்ரீ மத் – குமரகுருதாச சுவாமிகளால்** இஃதருளிச் செய்யப்பட்டது. இவ்விருத்தத்தினை யுள்ளுருக்கத்தோடு முப்போதும் பாடியாடுக. ஆடாவிடினும் பாடுக. அங்ஙனஞ் செய்வார்க்கு உரோகநாசம், பாபநாசம், சத்துருநாசம், ஆயுள்விருத்தி, தைரியவிருத்தி, வீரியவிருத்தி, புத்திரவிருத்தி, புண்ணியவிருத்தி யுண்டாதலோடு சர்வார்த்த சித்தியும், முத்தியும் வாய்க்கு மென்பது வாய்மை.*

## அருளானந்தலகரி

### பண் – பியந்தைக்காந்தாரம்.

சீரியர் பேணும் வேதஞ் சிறந்தசற் சைவப்
பெருமானெ்ன் றோது முரைகண்
டாரிய ரேத்தி யுன்ற னழிவற்ற திவ்ய
வடிதன்னை யெய்தி மகிழ்ந்தார்
பூரியர் கேண்மை யுற்றுப் புரையாய பொய்வாழ்
வதிலேச தாநா னுழன்றேன்
வேரியந் நீபத் தார்கொள் புயவெந்தாய் மேலுன்
வியனீரத் தாலுய் குவலே. (1)

தடங்கணி யெங்க ளம்மை யெனுந்தேவ சேனை
தழுவுந் திருத்தோ ளுடையோய்
மடங்கலின் றோலை மேலே கவினப்பூண் போர்தம்
மகனாமெய் யின்ப மழவே

அடங்கிடா மோக முள்ள வடியேனை யும்மோர்
　　தொழும்பாக்க வந்த கிருபை
விடங்கமே யுன்னா லுய்ந்தே னினமுநா னேத்துன்
　　வியனீரத் தாலுய் குவலே. (2)

கற்பதுங் கேட்பதுஞ்சூ ழுனையன்றி யுண்டோ
　　கவினேறு வேடர் குலமான்
சொற்படி செய்யும் பெற்றி யுடையென்றன் சிந்தைச்
　　சுவதந்திர நட்பே தனுசர்
துற்செய லெல்லா மோயப் பெருஞ்சண்டை செய்த
　　சுடர்ஞாங்கர் வீரா வெளியேன்
விற்பன வுன்னா லுய்ந்தே னினமுநா னேத்துன்
　　வியனீரத் தாலுய் குவலே. (3)

ஐம்முகத் தெய்வம் வேறே யறுதுண்டத் தெய்வ
　　மதுவேறென் றோதும் விகற்பு
மைம்மனத் தோர்கட் கந்தோ விரண்டாகத் தோற்றி
　　மயக்கத்தை யுண்டு செயுமப்
பொய்ம்மருள் வீட்டி யெற்குப் புரையற்ற பாலின்
　　றரம்போல் விளக்கி யவொரு
மெய்ம்மணி வேலின் மன்னே யினியீடி லாவுன்
　　வியனீரத் தாலுய் குவலே. (4)

பேருரு வூரொன் றின்றிப் பிரிவற்ற சோதிப்
　　பெருக்கா நிலாவு நினையே
பேருரு வூரிங் குள்ளோர் பிறந்தீற டைந்தே
　　யுழலா துணர்த்த வெனவே
பேருரு வூருங் கொண்டு பிரகாசிக் கின்ற
　　பெருமானென் றோர்ந்தேன் கருணை
மேருநல் லெந்தாய் நாயே னினியீடி லாவுன்
　　வியனீரத் தாலுய் குவலே. (5)

எள்ளினுள் ளெண்ணெய் போல விடையேது மின்றி
　　யிருக்கின்ற வுன்னை யுணராக்
கள்ளுள முள்ளோர் போலக் கணக்கில்லாக் காலங்
　　கழித்திட்ட வென்மேற் கருணை
உள்ளநீ தந்த நெஞ்சா லுணர்ந்தேனின் னீர்மை
　　யொளிசால் சிகண்டி யுகைப்போய்
வெள்ளியங் குன்ற வாழ்வே யினியீடி லாவுன்
　　வியனீரத் தாலுய் குவலே. (6)

சுத்தசன் மார்க்க முக்கிய சுகானந்த வாழ்வுச்
சுவதந்திர னீயென் றறிந்த
முத்தரெல் லாம டைந்த முழுநன்மை நாடி
யுளநாள் கழிக்க விஙனே
வைத்தநின் னட்புக் கேநா னளப்பில்லாத் தண்டம்
வழங்கும்பண் புக்கும் வலனோ
வித்தகச் சேயே யெந்தா யினியீடி லாவுன்
வியனீரத் தாலுய் குவலே. (7)

எண்ணிலா யாக்கை பெற்றே யுழிதந்த பாழ்த்த
விழிநெஞ்ச னேனை யொருநீ
நண்ணிவந் தன்று சொற்ற நலம்போல வின்னு
நறுநன்மை யெல்லா மருளும்
அண்ணலா யுள்ள திவ்விய வருட்கொண்ட லேமும்
மலச்சேற்றி லாழ்ந்த வெனதுள்
விண்ணினுள் ளன்பா மன்பே யினியீடி லாவுன்
வியனீரத் தாலுய் குவலே. (8)

தேவருங் கானி னோன்பு செயுமைய ருங்கா
ணருஞ்சோதி யாய வுனைநான்
பாவினா லேத்த விந்நாண் முனரென்ன புண்யம்
பரிவிற்செய் தேனோ வறியேன்
ஆவியா யுள்ள வென்ற னானந்த வெள்ள
வமுதே யனாதிப் பொருளே
வீவறு கந்த சாமி யினியீடி லாவுன்
வியனீரத் தாலுய் குவலே. (9)

மட்டறு பத்தி கொண்டு புகழ்சொன்ன நாதன்
மனம்போல வாக்க மளித்தோய்
சட்டியினோன்பை முன்னாட் டவறாது செய்து
சயங்கொண்ட கோனுள் ளிறையே
தட்டறு மெங்க டேவே யடிநாடு வோரைத்
தயவாக நோக்கு முனையே
விட்டுவி டாம னன்கு பிடித்துக் கொண் டேனுன்
வியனீரத் தாலுய் குவலே. (10)

## முதல்வன் புராண முடிப்பு
### அந்தாதி
### கலிவிருத்தம் (இசை)

சந்திர சேகரன் றழற்கண் ணேபொறி
வந்தன வாறவை மாசில் கங்கைசார்ந்
தைந்துட னொன்றணை குழவி யாகியா
றந்தநன் மாதர்க ளமுத முண்டவே. 1

உண்டவை பலபல வுருவங் காட்டுபு
பண்டுமை யாலொரு படிவ மாயவள்
கண்டென வருத்தமு துண்டு காமர்செய்
அண்டவொண் கயிலைசென் றாடல் செய்யுமால். 2

ஆடலில் வெஞ்சுட ரசுவ மேறிய
தீடணை யம்புலி யிரத மூர்ந்தது
மூடமி லிந்திரன் முதலி னோர்கரி
சேடண வூர்ந்தது செம்பொற் சேயரோ. 3

செங்கரு டன்புலி சீய மோதிமஞ்
சங்குற ழேறுழை சரபம் யாடிவர்ந்
தெங்கணு மேகிய தெழில்கொ ளெந்நில
மங்கைய ரும்விழை மகிமைப் பிள்ளையே. 4

பிள்ளைமை நீத்தொரு பெருவ யோதிகம்
உள்ளவ னாய்ச்சுர ருலகை நன்குசெய்
உள்ளமொ டங்ஙன முலாவி னான்வன
நள்ளிட னடைந்துகின் னரஞ்செய் தானவன். 5

செய்யத னோசையிற் சேர்வி லங்குபுள்
மெய்யைம றந்தன வேய்ங்கு ழற்றொனி
ஐயனெ ழுப்பின னகலுண் மாதர்கள்
மையல்செய் விரகமுள் வருந்த நாளுமே. 6

மேலட ரண்டமு மேய சேயவன்
மாலுடல் வரையிடை வந்து வானவர்
பாலுறு வலிகளைப் பாறச் செய்துதன்
வாலிருந் தைவத வடிவு காட்டினான். 7

காட்டலுஞ் சதமகன் கடவு ளேயெமை
வாட்டொரு சூரனை மடித்துக் காவெனக்
கேட்டவ னஞ்சன்மின் கிருபை செய்துமென்
றாட்டரன் பாற்படை யரசை வாங்கினான். 8

வாங்கிமற் கணத்தொடு மகிவந் தோதியும்
வீங்குமெய்க் கயமுகன் றனையும் வீட்டுபு
பாங்குடைச் சிங்கனும் பானு கோபனும்
நீங்கிடக் கண்டவர் நிருபற் கீண்டனன். 9

கீளவை பரிகொடி யாய்க்கி ளர்ந்தன
ஆளொரு வரையடைந் தருணை யான்புகழ்
வாளன கண்ணியை மணந்து விண்புரந்
தாளெயின் மான்மணந் தான்ச யம்புவே

*கந்தசஷ்டி மாவிரத பூசையிற் கந்தபுராண படனஞ் செய்ய வேண்டுமென்னு நியதியுண்டு. அஞ்ஞான்று அது செய்தற்கியலாதார் இத்திருப்பத்தையே ஒருமுறை பத்தியோடும் பாடி அப்படன புண்ணியத்தைப் பெறலாம். ஐயமின்று.*

## திருத்தொடையல்

**அனந்தமறை உன்னறிவாய் விளங்களன**
**ஆறுமுக வடிவே காட்டித்**
**தனந்தனியா வந்தசிவ சரவணனே**
**பிரணவனே சாமீ உன்றன்**
**மனம்கனிய யானொழுகும் வகையைஉணர்ந்து**
**எனைஅறிய வரம் ஈந்து என்னைக்**
**கனம் படவும் வைப்பது நின் கடனே என்று**
**அனுதினமும் கருதா நின்றேன். 1**

கம்பன் முதல் நற்கவிஞர்க்கு அரசி என
இருந்த முதிர் கலைமாது ஔவை
தம்புலமைத் திடன் அறியக் கார் எருமை
மேய்த்திடுவோன் தனைப் போல் வந்து
சம்புமிசை ஏறி நறும் கனி உதிர்த்துப்
பரிகாசம் தனைச் செய் செவ்வேள்
எம்பெருமான் நீ ஆயின் உன் சீர்த்தி
யான் புகல்வது எவ்வாறன்றே. 2

அரிபகவன் இந்திரன் வானவர் முனிவர்
சித்தருமே அத்தா என்றுன்
திருவடியைப் பரவி அரும் சீர்த்தி படைத்
தார்கள் எனத் திகழ் மா வேத
உருவனைத்தும் அனந்தமுறை உரைத்து உரைத்தும்
உன் பெருமை ஒழிவே இன்றிப்
பெருகும் எனில் குகனே இங்கது சிறிது
மே என்னால் பேசற்பாற்றோ. 3

கயல் தாவு கமலம் நிறை பூம் பொழில் கொள்
காசி நகர்க் கடவுள் முன்பு
பயமேதும் இன்றி முதல்பரம் அரி என்று
அசத்தியமே பகர்ந்தோன் நீட்டு
புயமிரண்டும் தம்பமென நின்றிடுகால்
நன்னடுவில் புரக்கவே கைச்
சய உவணியால் கரம்கொய் நந்தி பரன்
சரணம் செய் தனிவேலோனே. 4

வாசமலி நறுங் கடப்பம் தார் புனையும்
தடங்கரவேல் மன்னாம் எந்தாய்
காசிநகர் மான்மியத்தில் கழறுவண்ணம்
மால் நெறியில் கரங்கள் தூக்கிப்
பேசியவொர் வியாதனைநீ மூடன்எனத்
திருப்பிருந்தைப் பெருமான் சொல்லி
ஈசன் எமக்கொருவன் உளன் என்ற பொருள்
நீ அலது ஒன்றிலையே யாண்டும். 5

அகத்தியன் நக்கீரன் நனி தவத்தின் உயர்
நாரதன் நல்லருளே பெற்று
மிகுந்த திருப்புகழ் புகன்ற கருத்துளனும்
ஏனைய உள் மெய்யோர் எல்லாம்
மகத்துவமுற்று உய்ய அடியளித்த சிவனே
எழில் கொள் மயிலில் ஏறும்
பகத் தரளமே உனது பதப்போது
பழிச்ச அருள் பண்ணாய் எற்கே. 6

பரமலை பொற் செந்தி வளம்பதி எனும் நல்
சாமிவரை படர் பூஞ்சோலை
விரியும் மடல் கமலம் நிரை காண் பழநி
ஏனைய நல் விரையார் வெற்பும்
மருமலர்ச் செம்பாதமெனும் நின் கழலைத்
தான் பரவு என் மனமே என்று இன்
அருள் நிலவக் குடியிருக்க வேண்டும் அயில்
பரித்துள விண்ணமர்வோர் ஏறே. 7

**அண்ட முதல் அணுக்கடையாய்க் கண்ட சரா**
**சரங்கள் எலாம் அருளாம் உன்றன்**
**பண்டம் எனத் தெரிதலினால் உனக்கிவண் நான்**
**இசைக்க ஒரு பரிசும் காணேன்**
**கொண்ட தமியேன் வணக்கம்தனைத் திருத்தி**
**யாக இங்கே கொள்வாய் என்னா**

**அண்டி நின்றேன் நின்னடிக்கே பொலம் பொலிந்த**
**அயில் சிகண்டிக்கு அரசே அன்றே.** **8**

நின்னடித் தொண்டான திருமாலாதி
தேவரெல்லாம் நின் கடைக் கண்
தன்னருளைக் கொண்டு அலவோ சருவநவ
சித்திகளும் தடத்தமாக
இன்னமிருந்து ஆற்றிடவும் இகல் படைத்தார்
ஏர் அயிற்கை ஈசா உன்றன்
நன்னயப் பொன் அடித்துணை கொள் என் போல்வார்
நலமென்னன நவில்வேன் மன்னோ. 9

அண்டருக்கும் முனிவருக்கும் அகில நிரை
படைப்பவற்கும் ஐயார் சீவை
குண்டனுக்கும் வாழ்வேது அவ் அசுரர் உயிர்
நீ வந்து குடியாவிட்டால்
பண்டுமறை நனி நுவன்றபடி தரையில்
உன்னருளைப் படையார் தாவே
கொண்டுழல்வார் கதிபுகுதார் எற்கு அருள் செய்
அருளுருவக் குகனே அன்றே. 10

எங்குமொரு கருத்தனென இருக்கும் உனைக்
குலக் கடவுள் என்றே கொண்ட
புங்கவர்கள் ஒருகாலும் வேறு தெய்வம்
குரங்கார்கள் புகர் ஒன்றின்றி
மங்கள முற்று உய்ந்து இகத்திலுயர் சீவன்
முத்தி தன்னை மருவி நின்றே
துங்க பரமுத்தியையுமே பெறுவர்
இந்துளப் பூந்தொடைமார்போனே. 11

நின் மலச் செஞ்சோதி வடிவுடைய உனை
அனவரதம் நினைப்போர்க்கு என்றும்
பொன்மயச் செம்மேனி உடம்புண்டாகும்
நரை திரைகள் பொருந்தா புன்கண்
தன் உரத்தினால் உயிர் கொள் கூற்றும் அணு
காது எதினும் சத்தாய் நிற்கும்
சின்மயத்தின் தெருட் பிழம்பே யான் தொழும் ஓர்
வேல்சமர்த்தா சிவச் சீர்க் குன்றே. 12

பிரமனைத் தாள் கொண்டு உதைத்தாய் பிரணவத்தின்
பொருளானாய் பிறை மா கங்கை
திருமுடிக் கண் அணியும் முக்கட் கடவுளுக்கும்
உபதேசம் செய்தாய் இந்த்ரன் பருவரலை
நீக்கி அரும் துறக்கம் அளித்
தாய் விபுதர் பதியே யார்க்கும்
குரு, குகன் என்றணி மறைகள் குயிலும் வணம்
எனக்கும் அருள் குயிற்ற ஒண்ணாயே. 13

வகுத்த முதல் சரியையொடு கிரியையும் நன்றா
நடக்கும் வழியாயுள்ள
அகத்து அறம் வழாது இகத்தில் வளர்க்க அருட்
சத்திதனை அருகே வைத்து
மிகுத்த திருக்கொலு இருப்பை யோகமுடன்
ஞானமதும் மேன்மேல் ஓங்கச்
சகத்தை இகழ் துறவறமுற்றே தவசி
வடிவெடுப்பை சயவேலோனே. 14

குறமகளைக் கரிமகளை இருமருங்கும்
வதிய அருள் கூர்ந்தே என்றும்
மறமொழித்த நின்னடியர்க்கு அருள் செயுமாறு
அனந்த முகம் மருவா நிற்கும்
இறை உனக்கிங்கு அறுமுகம் என்று அரற்றும் அனி
யாயமதும் என்னே பன்னும்
மறைகளுக்கு முடிவுரைத்த சிவகுரு என்
றுள்ளாமல் மருண்டே அன்றே. 15

திருப்பெறு நான் முகக் கிழவன் திருநாதன்
உவணை வளம் சேர்ந்தோர் மற்றும்
உருப்படைத்த பசுக்களுக்கெல்லாம் சுகுர்த
அபயகரம் உதவா நின்ற
அருட்படைத்த நினக்கு அனந்தம் கரங்களென
உன்னாது ஈராறு கை என்று
இருப்புரைப்பது அவிவேகம் அன்றோ என்
இதய நடு இருந்திட்டோனே. 16

ஆறுமுகப்படு முனம் நீ ஐந்து முகத்
துடன் நிலவி அழியா நூல்கள்
கூறும் முறைப் படி அதன் பின் குறைவில் சிவ
சத்தியொடும் குறைவொன்று இன்றி

ஈறு முதல் ஒருவிட நின்று உருக்காட்டு
அனாதி உன்னை ஈசன் சேயென்று
ஊறில்லாது உரைத்திடுதல் உபசாரம்
அல்லால் வேறொழுங்கு உண்டோவே. 17

ஐந்து வகைப்படு பூத இயல்பினைக் கொண்டு
அளவில் உலகாக்கி வாங்க
ஐந்து முகத்துடன் விளங்கி ஐந்தெழுத்தின்
உருவாகி அவற்றோடுள்ள
பந்தமொன்று சால் குடிலை அருவமுகம்
என்பதையும் பரித்தே மஞ்ஞை
உந்தும் அறுமுகனான ஆறெழுத்துக்கு
இறையே என் உறுவல் தீராய். 18

பிருதிவி கம் வாயு அனல் வெளி அருக்கன்
விது உயிராப் பிறங்கோர் எட்டும்
திருவுருவமாம் உனக்கு என்றரிய சைவ
நூல் நுவலல் தெளிவே அந்தச்
சர அசர விதப்பு அனைத்தும் நின்னனவே
ஆகலின் அச்சார் நீத்து எந்தப்
பரசமயமும் வாழாது அன்றோ பொற்
சிகியூரும் பவுள்சுளானே. 19

சகளமதில் அயன் அரி ருத்திரன் மயேச்
சுரனெனும் நல் தகைத் தே ஆகி
நிகராறு நிட்கள சகளத்து ஓங்கு சதா
சிவனாகி நிறைவாய் எங்கும்
திகழ் அருவ நிட்களத்தில் நிமல விந்து
நாதம் உமை சிவமாய் நின்றே
இகபரத்தும் இருந்தரசுபுரி குக நின்
அடிமதர்வில் எனைச் சேரன்றே. 20

ஒண் கலைப் பெண் கொழுநனும் ஓர் வெண்பரப்பில்
துயில்பவனும் ஒளிர் தீ நெற்றிக்
கண்படைத்து நல்லறத்தின் தெய்வமெனும்
வெள்விடையுள் கனிந்தூர் தேவும்
பண்படைத்த ஆரணம் சொல் வண்ணம் அருள்
எனும் திரித்வ பாத்தியம் தான்
விண்படைத்த உனக்கு அல்லால் வேறு சொல்லல்
திரிபாகும் மிளிர்வேல் மன்னே. 21

ஆடகப் பொன்னே பணிகளாய் இருக்கும்
முறைமையைப் போல் ஆன்மா எல்லாம்
பாடுடைக் கோள் மாயையினைப் பலபேத
உடலாகப் பரித்தே நிற்கும்
பீடிருக்கும் நின் வடிவ நிட்களத்தில்
ஆன்மாவாய்ப் பிறிது ஒன்றின்றிக்
கூடி நிற்றலால் எவையும் நின்வசமே
யாம் அயிற்கைக் குகனே அன்றே. 22

நித்தியத்தை உடைய பசுக்களை மாயை
கன்மமென நிகழ்ந்தே பற்றும்
நித்தியத்தை உடைய இருள் மலப் பாசம்
அகற்றி இன்பம் நீங்கா முத்தி
நித்தியத்துக்கு இடமது எனும் நின்பதத்தில்
என்னை வைக்க நீவாராயோ
நித்தியச் சொல்லொன்றை வந்து சொலப் பதியென்
றேயான நெடுவேல் மன்னே. 23

உலப்புதிப்பு இலா உனடி அடைதலன்றிக்
கதி பிறிதொன்றுண்டே என்று
பலத்துழல்வதே பெருத்த அஞ்ஞானம்
அஞ்ஞானம் பரமார்த்தத் தைத்
தலத்திலுறை பசுக்கள் தரத்தளவாக
அருள உருத்தானே காட்டும்
நலக்கடவுளே எனது நவை தீர்க்க
ஒகரமதில் நடியாயன்றே. 24

பரங்கடல் என்று அதன் குமிழி ஒளிர்பசு என்
றது தகரப் படர் நீர் ஒன்றாய்த்
திறம்படல் போல் முத்தியென்று விளம்பினவர்
கருத்தை நனி தெளியார் எல்லாம்
புரந்தரன் அச்சுதன் பணி உன்பதம் சேரல்
முத்தி எனப் பொருள் காணாது இங்கு
அரும் துயரம் அடைதலன்றிப் பெறும் பயன்என்
நறும் கடம்பை அணி மாதேவே. 25

பெரிதினுக்கெலாம் பெரிய சிவன் அடிய
ருள் அடக்கம் பெறுவான் என்னா
அரிய ஔவை சொன்னபடி நின்னடிய
ருள் அடக்கம் ஆவாய் அன்னோர்

திருவடியை அடிமை முடி பொருந்துமெனில்
பிரம லிபி சிதைவு ஆகாதோ
சரவண சன்மய துரிய அமல சிவ
னே கருணை தாராய் மன்னோ. 26

தண்ணிருக்கும் பூங்கமல சுமனசமெல்
லாம் முனிந்து தாதெய் என்று
விண்ணடிக்க மண்ணடிக்கக் கிங்கிணியும்
நூபுரமு மேலே தாங்கிக்
கண்ணிருக்கும் மெய்த்தவசர் முன்னடிக்கும்
நின் சரண் என் கருத்தாய் நிற்கப்
பண்ணிய என் நோன்மை என்கொல் குக்குடப்ப
தாகையுடைப் பரனே முன்னே. 27

இனித்த அலர் முடித்த சுரர் எவர்க்கும் அருட்
குரு என உற்றிருந்தாயன்றி
உனக்கொருவர் இருக்க இருந்திலை ஆத
லால் உனடி உளமே கொண்ட
கனத்த அடியவருடைய கழற்கமலம்
உள்ளுகினும் கறை போம் ஈண்டு
செனிப்பதுவும் மரிப்பதுவும் ஒழிந்திடுமே
குறக்கொடியைச் சேர்ந்திட்டோனே. 28

சொலற்கரிய விழுப்பொருள் என்றடிக்கடி சொல்
ஆரணங்கள் துதியே பண்ண
நிலைப்புடைய குருத்துவமும் அருட் கடலும்
ஆரமுதும் நினைவோர் நெஞ்சம்
சலப்பட விடாது இருக்கை விளக்கறிவு
மாய் இருக்கும் தனிவேல் ஈசா
குலக் கடவுளாய் எனக்கு அன்றதிர்த்த படி
யேஅருள்செய் குணமாய் வந்தே. 29

**தமருகத்தை மூவிலையை எழிற்பிணையைப்**
**பிடித்த திருச்சய மாதேவன்**
**அமர் கயிலைப் பதி எமக்குத் திருக்கோயில்**
**என்னினும் எம் அடியார் நெஞ்சே**
**எமதிருப்பென்று எஞ்ஞான்றும் இருந்து எங்குமே**
**நிறைந்த இறையே இந்தக்**
**குமரகுரு தாசனைக் கைவிட்டு விடா**
**மல் காத்துக் கோடி அன்றே. 30**

*கலியுகம் 4994–ல் நிகழ் நந்தன ஆண்டு 25ஆம் தேதி கார்த்திகை குருவாரம் (1892)*

***திருத்தொடையல் முற்றிற்று.***

*ஸ்ரீ விசாகப் பெருமாளுக்குரிய விரததினங்களிலும், மற்றைத் தினங்களிலும் இத் திருத்தொடையல் பாடும் போழ்து கவிக்கொரு* ***கர்ப்பூரதீப மேற்றுக.***

*குமரகுருபரன் திருவடி வாழ்க*

# சஷ்டி வகுப்பு

குழிப்பு (சந்தபேதம் – 32)

தந்தன தனதன தானன தானன
தந்தன தனதன தானன தானன
தனதன தனதன தானனா – தன –
தனதன தனதன தானனா 1

தத்தத் தனதன தத்தத் தனதன
தத்தத் தனதன தத்தத் தனதன
தந்த தனதன தானனா – தன –
தந்த தனதன தானனா 2

தனத்த தனதன தனத்த தனதன
தனத்த தனதன தனத்த தனதன
தான தானன தானனா – தன –
தான தானன தானனா 3

தானன தானன தானன தானன
தானன தானன தானன தானன
தத்த தனத்தன தானனா – தன –
தத்த தனத்தன தானனா 4

தனதன தனன தனந்த தானன
தனதன தனன தனந்த தானன
தனந்த தானன தானனா – தன –
தனந்த தானன தானனா 5

தானதன தந்தனன தத்தான தானதன
தானதன தந்தனன தத்தான தானதன
தனதன தனதன தத்தனா – தன –
தனதன தனதன தத்தனா 6

தனனதன தனதத்த தனனந் தனத்தா
தனனதன தனதத்தா தனனந் தனத்தா
தனனதனா தானதத்த தானனா – தன –
தனனதனா தானதத்த தானனா 7

தனனதன தத்தன தனனதன தாத்தன
தனனதன தத்தன தனனதன தாத்தன
தாந்தன தனதன தாந்தனா – தன –
தாந்தன தனதன தாந்தனா 8

தனன தனத்தன தாந்தன தந்தன
தனன தனத்தன தாந்தன தந்தன
தனன தனதன தந்தனா – தன –
தனன தனதன தந்தனா 9

தான தந்தன தானன தானன
தான தந்தன தானன தானன
தனத்த தனதன தானனா – தன –
தனத்த தனதன தானனா 10

தாந்த தந்தன தாந்த தந்தன
தாந்த தந்தன தாந்த தந்தன
தனதன தனதன தந்தனா – தன –
தனதன தனதன தந்தனா 11

தந்தந் தந்தன தந்தந் தனதன
தந்தந் தந்தன தந்தந் தனதன
தனந்த தான தனாதனா – தன –
தனந்த தான தனாதனா 12

தனன தனதன தனன தனதன
தனன தனதன தனன தனதன
தத்தா தத்தா தானதனா – தன –
தத்தா தத்தா தானதனா 13

தத்ததன தந்ததன தத்ததன தந்ததன
தத்ததன தந்ததன தத்ததன தந்ததன
தனதன தத்தன தாந்தனா – தன –
தனதன தத்தன தாந்தனா 14

தன்னன தத்தன தன்னன தத்தன
தன்னன தத்தன தன்னன தத்தன
தானனத் தானன தையனா – தன –
தானனத் தானன தையனா 15

தனதன தனத்ததன தனதன தனத்ததன
தனதன தனத்ததன தனதன தனத்ததன
தானன தனன தானதனா – தன
தானன தனன தானதனா 16

1. அந்தரர் முனிவரர் நாகர்க டானவ
ரங்கெழு மநுடர்க ணாடொரு வாழ்வுள
வரனுதல் விழிவரு தூயனே – யுமை –
யவண்முலை யமுதுணும் வாயனே

2. யத்தித் திருமுக நித்தற் கிளையவ
வப்புச் சுரநதி நச்சற் புதசுத
வண்டர் பதிபணி பாதனே – குண –
சந்தர னெனவரு நீதனே

3. யரத்த மலரினு நயத்த துகிரினு
மழுக்கி லழலினு மிகுத்த துவரொளி
ராக ஞானவி னோதனே – சிவ –
போக போதக நாதனே

4. யாசினி யாரறு மீன்மத லாய்தக
ராகிய வாகன மேறிய வானவ
வட்ட குணப்பர மேசனே – சிவ –
சித்தர் கணக்கிரு பேசனே

5. யளிபல குடையு மலங்க லோடெழி
லவிழ்மண முடைய கடம்பு மேபுனை
யகன்ற மார்புடை யாதியே – களி –
நிறைந்து ளோரடை சோதியே

6. யாடகந றும்பணிம ணிப்பூணெ லாமிளிர
வாசறுந டம்புரியி றைச்சீர றாமயிலி
னனுதின மமருமுன் மத்தனே – யர –
னொடுநவில் பிரணவ கத்தனே

7. யடலவுண குலமுற்று மழியும் படிக்கே
யசுரபதி வரையொத்த வுருவங் கிழித்தே
யவிரயிலார் நீடிருக்கை வீரனே – யென –
தளியகலா தூடிருக்கு நீரனே

8. யணிமதுகை யுற்றபல் பறவையர சாத்திரி
யதியுரமு டைக்கலு ழனைமுனிசெ மாப்புய
ராண்டலை யணைகொடி யாண்டவா – குடை –
தோன்றிட வசையொரு தாண்டவா

9. வகிலம் வழுத்தரு ளாஞ்சுர குஞ்சரி
யரிய கொடிச்சிய வாம்படி வந்திக
ழழக முருகர விந்தனே – குளிர் –
நயன வறுமுக கந்தனே

10. யாழி சங்கநி லாவுகை மாயனு
மாத ரஞ்செறி பாரதி நேயனு
மருக்க னொளியன மேனியே – யுள –
வுருத்தி ரனுநினை ஞானியே

11. யாம்ப ரம்பர வோஞ்சி தம்பர
வான்ற துங்கம னாம்பு யந்தனி
லமர்குக சரவண சம்புவே – சுப –
மழைதரு மருளெனு மம்புவே

12. யஞ்சஞ் சும்படி யுந்தும்பெரியவ
ரண்டுஞ் செந்திரு நின்றின் புதவிடு
மனந்த வேத விலாசனே – நனி –
சிறந்த யோக வுலாசனே

13. யமுதம் விழைநல முடைய குறுமுனி
யதிக மகிழ்வுற வமுத வுரைநவி
லத்தா முப்போ தூறிலியே – யுயர் –
சத்தா சித்தா வீறிலியே

14. யற்றமறு கந்தகிரி யைக்கருது சிந்தையர
கத்துனித டிந்ததைய ளித்தருள வன்புசெயு
மகணித வற்புத சாந்தனே – பர –
சிவநிலை யைத்தரு சேந்தனே

15. யன்னையு மப்பனு மண்ணுக னிட்டனு
மண்ணனு மற்புறு செம்மலு மத்தனு
மாறெழுத் தானென வுள்ளியே – பல –
நூறெழுத் தார்கவி சொல்லியே

16. யலையுமெ னினைப்பிலுள குருபர தமிழ்க்கலைஞ
ரவையிடை மணித்தவிசில் வதியொரு திருப்புலவ
வார்வொடு பொருநர் சூழ்பரனே – துடி –
நாடக மதுசெய் மாசுரனே

17. சுந்தர முறுகுற ணேரிசை காசறு
சிந்தியல் பலதொடை நாலடி கீரணை
தொகலறு சவலைக ளேகெடா – முத –
லுறுகவி யகவலி னேர்மைசேர்

18. சுத்தத் தொடர்புமி ரட்டைக் குறளிசை
துற்றத் தெகுள்கவி யற்றற் றமைவது‘
துண்டு படுகலி நாலிலே – யியை –
சந்த முளகலி நூலிலே

19. தொடுக்க வருதர வுகொச்ச கமடிகள்
சுருக்க மறவரு மியற்ற ரவிணைசி*
லேயொர் தாழிசை தோல்களார் — பல —
வேயொர் தாழிசை மீறியே

20. சோர்வுமு றோர்கலி நேரிசை சேர்கலி
தூயசு வேதம தார்கலி சீறடி
துப்ப லையொத்துறு பாவரோ — நல —
கட்ட ளைபெற்றவொர் பாவரோ

21. தொனிமலி குறள டிவஞ்சி சீர்மிகு
தொடையடி யுளவொ ருவஞ்சி யேமரு
டொடர்ந்த பாவிரு பாதமே — யுள —
குறைந்த தாழிசை நாதமே

22. தூவுடனி யங்குமொரு முத்தாள தாழிசைக
ளீரடிகொள் செந்துறைகண் முப்பாத மார்துறைக
டுரிசிறி ரிபதவி ருத்தமே — சது —
ரடியுடை யவெளிவி ருத்தமே

23. துறுமகவ லளவொத்து நிகழுஞ் சதுர்ச்சீர்
சிவணியிடு மொரு முப்ப தமுறுஞ் சிறப்பார்
தொடையுடையோர் தாழிசைச்சொ லேறுபா — வக —
வலதிழியா நீடுறைச்சொ லார்வதே

24. தொடையொலி மிகுத்தெழு நெடிலடியின் மேற்படு
மகவலின் விருத்தமு மிருபதம றாத்தளை
தோன்றொரு திரிபத நான்குமா — முடி —
வாம்பத மிகுகலி சேர்ந்தசீர்

25. துதையு மிழிப்பிசை நான்கடி யைந்துசி
ருடைய நிலைத்துறை மேன்கணி தம்பெறு
துறைக ளளவடி நன்குமே — வுரை —
பலவு முறுகலி யந்தமே

26. தோன்மு ழங்கிரு சீரடி நாலினே
மூவி தங்கிள ரோர்பொருண் மீதினோர்
சுரக்கு மியல்புடை யேசிலா — நறி —
யவச்சி யிசையிரு சீரினே

27. தோங்க ளங்கமி னான்க ரும்பத
மோங்கு வஞ்சியை யேய்ந்தி டுந்துறை
துகளறு துழனிகொள் சிந்துசேர் — சது —
ரடியுடை யிறுதியு மின்சொலே

28. துன்றுஞ் சந்தநெ டுஞ்செங் கவிசது
ரங்கம் பொங்ககி பந்தந் திகிரிகள்
சுருங்கு பாநல வேகபா – தமு –
மிகுந்த பாவெழு கூறுசீர்

29. சுலவு சுழிகுள முரசி ரதகவி
சுடரு மயிலயில் வினவல் விடைபிறி
துப்பா நற்கான் மாறுதலே – கர –
வுப்பா வொற்றே றாததுமா

30. சொற்சுவைகொள் பங்கிகள்ச துர்த்தமொர்த ரம்படுவி
கற்பநடை பங்கயமி னச்செயுள்கள் கொம்பிலது
சுகவித ழுற்றது கூம்புபா – முர –
ணுறுபசு முத்திர நோன்பொடே

31. சொன்னவர் மெச்சிட மின்னுதி ருப்புகழ்
பன்னிய வற்கரு ளின்னமு தக்கட
றோன்மரைப் பூவுறை செல்வமா – மரு
காவிருப் பாலென துள்ளுளே

32. தொடர்வெரு வறப்பெரிய வருள்புரி நினைப்பொடு
மறதியும்வி ளைக்குமிரு மலமத மறக்களை
சூர்தபு நினது சேணருளே – யுற –
வாகிட வருள்செ யாயினியே,

33. மந்திர விதிவழி பாறயிர் நீடுக
ரும்பிடை வருதெளி சாறிள நீர்நறு
மணமுள வுதகமெ லாமொரே – மன –
தொடுநல திருவபி டேகமே

34. மத்துப் பிரசமு மிட்டக் கனிகளு
மொட்பச் சுரபதி சிட்டிப் பவனரி
வஞ்ச மறுசிவ னாரெலா – மணி –
யொண்பொ டியெனபி டேகமே

35. வழுக்க ளறமிக விழைத்து ரியவுடை
யுடுத்து நவையற முறுக்கி யகனக
மார்பு நூலிட லேசெயா – விரை –
நாறு தேய்வைக ளேயிடா

36. மாலதி கூவிள நீபம சோகுக
லாரமி ராசிவ மாதிந றாமலர்
வைத்த புதுத்தொடை யேயிடா – வரி –
யட்ச தையிற்சில தூவியே

37. மருமலி புகைக ளெழும்ப வேபணி
யெரிசுடர் பலவு மிலங்க வேபணி
வளர்ந்த வாழை பலாவிளா – வுதிர் –
குளஞ்சி மாதுளை கோளியே

38. மாவினிய முந்திரிபு ளிப்பேயி லாவதரி
யாசினிக ளின்கனிகு வித்தேயெ ளோடுபொரி
வடையதி ரசமிடி யப்பமோ – தக –
மகலிலை யடையவல் பிட்டுமா

39. மதுரரச மருவுற்ற புனலின் றயிர்க்கூழ்
கடலைபல பயறுப்பொ டறுநன் சுவைச்சீர்
மலியநிலா வேநிகர்த்த பாகலே – யுய –
ரெகினமெலீ போலிருக்கு மோசையே

40. வரியவரை கத்தரி துவரைபுடல் பூச்சுணை
கொடிவெளரி கக்கரி யிவைகளது காய்த்திரள்
வான்படர் முனைவரும் வேண்டுமோர் – சுவை –
தேங்கிய பலமுலம் வாங்கியே

41. மலர நறுக்குபு மூண்டெரி யங்கியி
லூரிய குணப்பதம் வீங்கவ யர்ந்திறை
வதியி லெழுசிறு செம்புநா – லிலை –
யுளது பசளைபொ னொன்றுமோர்

42. வாட னந்திய கீரைகொய் கீரைசில்
கீரை தண்டுறு கீரைகள் யாவையும்
வதக்கி நயனுற மூடியே – யிலை –
யிருத்தி நறுவய லூரிலே

43. வாய்ந்த தண்புனல் பாய்ந்த பைம்பயி
ரீன்ற வின்சுவை யார்ந்த செஞ்சிறு
மணிமிள கிவிலையு யர்ந்தசீ – ரக –
வரிசிய டிசில்பணி யன்பிலா

44. வண்டன் சண்டனி டம்பன் கொலையினன்
வம்பன் றுன்பின னெங்குந் திரிபவன்
மறங்கொ ளீனர்கள் காணொணா – வணம் –
வளைந்த சீரையு ளேயெலாம்

45. வரிசை நிரனிறை யிசையு மழகது
பெருகி யமர்வுற வடுவில் சுசியுடன்
வைத்தே நட்பா மேன்மனதோ – டுப –
டைத்தே நற்பா கேயிலையே

46. வட்டகையி னன்கமைய வைத்தமல கந்தமல
ரர்ச்சனைபு ரிந்துபிர சித்தசிவ கொன்றலையில்
வகுளமு டித்தசு ரேந்திரா – வடி –
யவர்கள்ப ழிச்சுபு ராந்தகா

47. வன்னியு மத்தமும் வெண்மைய ருக்கமு
மன்னுபு யச்சிவ னண்ணுமொ ருத்திகை
மாமணித் தீபகம் வல்லியே – விழி –
யாயிரக் கோபதி செல்வியே

48. வதுவைசெ யருட்குமர மறைபுகழ் பரப்பிரம
வெனநனி துதித்தெமிட ரிறவரு ளெனப்பணியு
மாதவர் தலைவ னேநயனே – படர் –
பாளித மணிய னாமயனே,

49. இந்திர னலரயன் மாதவ னாதவ
னந்தக னறலிறை யீசனி சாபதி
யெரியிறை யளகையன் வாயுவீ – டுள –
நிருதிய றிவறவர் பூதரே

50. யிட்டக் கருடர்கள் சித்துப் புருடர்கள்
செச்சைக் கினரர ருத்தப் பணிமிலை
யிஞ்சை யுடையபி சாசர்வே – ணியர் –
விஞ்சை யினரிசை பாடுவோ

51. ரியக்க ரிவர்பலர் விதித்த பணிசெய
வுடுக்கை திமிலைகள் பெருத்த பதலைக
ளேதி லாகுளி பேரிமா – முர –
சோடு தூரிய மாமுழா

52. வேணுடை யானகம் வானிடி போலிரை
யேதர வூதுபல் கோடுகள் காகள
மிக்கு மணிக்குழ லேழுகோ – லுள –
பொற்க லமெற்கிணி கோடியே

53. யிமிரொலி யிசைக டனந்த தானன
தனதன தனன தனந்த னாவெனு
மியம்பலேதர வானளா – முரு –
விலங்கி யானைகள் கோடியே

54. யேசறுபெ ருங்கிரிக ளைத்தாவு தூசிமுது
கானதுவ ளைந்திரவ ணப்பேரு லாமிருக
மெழுசத மெழுதர மிக்கதீ – பிகை –
முழுமதி நிகர்குடை பிச்சமே

55. யிணைசிவிறி விரிவட்ட மெனுநெஞ் சரைத்தான்
வருகவென வசைபொற்கை புரையுங் கொடித்தே
ரிரிதலிலா வார்கழைக்க ணேறுநீள் – கொடி –
சுழலருகா வேழிலக்க மாகவே

56. யிருபுற நடக்கவொர் பெரியதுச நாட்டிய
விரதமிசை யொப்பறு பவளமலை போற்படை
யேந்துபு வருபெரு வேந்தனே – கிரி –
சாய்ந்திட வயிலெறி காந்தனே

57. இகலுந ருக்கெம னாந்தனி மந்திர
வினியவ ருக்கினி தாங்குண பஞ்சர
விமையர் களிகொள வென்றுளே – யெணி –
யவர்கள் புரிதரு மங்களா

58. வேம பந்தன பூடண சேமனே
நாகர் சிந்தையி லேயுள வீமனே
யிடுக்க ணறுதவ ராஜனே – மறை –
முடிக்கு ளுளபர தேஜனே

59. யேங்கெ னெஞ்சினை யாய்ந்தி டுந்தயை
சான்ற சம்ப்ரம பூஞ்ச தங்கைக
ளிலகிடு பதபர மண்டலா – பக –
லனையக னமகர குண்டலா

60. வெங்குந் தங்குவி சும்புஞ் சிறிதென
மிஞ்சொண் பண்பொடு நின்றெங் குநிகழு
மிரண்டி லேகவ னாதியே – கறை –
யிறந்த சாதம னாதியே

61. யிடரில் கலமுனி யுரிய சுகமுனி
யரைய முசுமுக னறிய பசுமுக
னிப்பார் மெச்சோர் கீரனுமே – னசை –
யுற்றோய் வற்றே சூழ்குரவா

62. வெட்டுமலை யுந்தகர வெற்றிமல ரங்கைகளி
லட்டகரிபந்தென வெடுத்த விறல் பம்பிளைஞு
விரணிய வெற்பெனு மாண்புசால் – பொறை –
யதனைய சைத்ததி லேய்ந்தகோ

63. டென்னுமு கட்டினை விண்ணிலி றைத்தகை
மன்னவ வைப்பசி மன்னிடு சட்டியி
லேபுசிப் பார்திரு வுள்ளமே – யெனை –
யாதரித் தாளருள் வெள்ளமே

64. யெவையும றிசித்துருவ மகுடமு டியுற்றவர்க
டொழுசடை முடித்திருவர் புரவல குணத்திரய
வேதமில் பெயர்க ளாயிரமே – யுள –
பாவகி துரியப ராபரமே.

## தங்க ஆனந்தக் களிப்பு

சுயமான தங்கமித் தங்கம் – சிவ
சுப்பிரமணியமெனுந் தெய்வத் தங்கம்
1. அந்தரர் வேண்டொரு தங்கம் – ஈறி
லறுசிக ரக்கிரி நின்றெழு தங்கம்
சுந்தர மாய்ச்சுடர் தங்கம் – உமை
துங்க மலர்க்கரந் தங்கொரு தங்கம் (சுயமான)

2. வேதத்தி லேயுள்ள தங்கம்–சுத்த
வித்தைசொல் லாகம நித்தியத் தங்கம்
நாதத்தின் மேலுள்ள தங்கம் – அந்த
நாதங் கடந்தபின் னாமடை தங்கம் (சுயமான)

3. பார்ப்பவர்க் கின்புசெய் தங்கம் – சிவ
பாக்கியமெல்லாம் பகுக்கின்ற தங்கம்
சீர்ப்பர தத்துவத் தங்கம்–நிறை
சிற்பர தேஜோ மயானந்தத் தங்கம் (சுயமான)

4. நினைப்பவர்க் கின்புசெய் தங்கம்–தொண்டர்
நெஞ்செனும் பேழையி லேநிறை தங்கம்
வினைப்பவம் வெல்பசுந் தங்கம் – ஞான
விளைவற்ற பூமியிற் புதைபட்ட தங்கம் (சுயமான)

5. வாதிகட் கெட்டாத தங்கம் – அன்பு
வறண்டலை வோரறி யாவருந் தங்கம்
தீதிகற் சூள்களை தங்கம் – தவச்
செல்வர்க்குச் செல்வம தாந்திருத் தங்கம் (சுயமான)

6. அஞ்சனத் தெட்டாத தங்கம் – பத்தி
யஞ்சனத் தேயெட்டு மற்புதத் தங்கம்
செஞ்சயத் தைத்தரு தங்கம் – சிவ
சித்தர்கள் யோகிகண் மெச்சிடு தங்கம் (சுயமான)

7. மாற்றி லுயர்ந்தொளிர் தங்கம் – எல்லா
மங்கும் படிக்கருள் செய்தனித் தங்கம்
ஆற்றலின் மேம்படு தங்கம் – பகி
ரண்டமெல் லாம்விலை கொண்டுயர் தங்கம் (சுயமான)

8. அளவைக் கடங்காத தங்கம் – தின
மனலிட் டுருக்கினு முருகாத தங்கம்
களவுக் கிணங்காத தங்கம் – தன்னைக்
காமுறு வார்மிடி தீர்க்கின்ற தங்கம் (சுயமான)

9. யாதனை யைத்தெறு தங்கம் – தெய்வ
யானை விழிக்கித மாயவிர் தங்கம்
ஏதணை யாநறுந் தங்கம் – எழி
லேனலி னோர்கொடி தான்படர் தங்கம் (சுயமான)

10. ஞானவிண் ணாகின்ற தங்கம் – நல
நல்குந் திருப்புக ழோன்கண்ட தங்கம்
வானவர் மாமுடித் தங்கம் – நம்மை
வாழ்விக்க வந்த பராபரத் தங்கம் (சுயமான)

### ஸ்ரீமத் அருணகிரிநாதசுவாமிகள் அருளிச் செய்த

# கந்தர் அநுபூதி

## கலிவிருத்தம்

'ஆடும் பரி, வேல், அணிசேவல்' எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்!
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடும் தனி யானை சகோதரனே ! 1

உல்லாச, நிராகுல, யோக விதச்
சல்லாப விநோதனும் நீ அலையோ?
எல்லாம் அற, என்னை இழந்த நலம்
சொல்லாய், முருகா ! சுரபூ பதியே ! 2

வானோ? புனல் பார் கனல் மாருதமோ?
ஞானோ தயமோ? நவில் நான் மறையோ?
யானோ? மனமோ? எனை ஆண்ட இடம்
தானோ? பொருளாவது சண்முகனே! 3

வளைபட்டகைம் மாதொடு, மக்கள்எனும்
தளைபட் டழியத் தகுமோ? தகுமோ?
கிளைபட் டெழு சூர் உரமும், கிரியும்
தொளைபட் டுருவத் தொடு வேலவனே ! 4

மக மாயைகளைந்திட வல்ல பிரான்
முகம் ஆறும் மொழிந்து மொழிந்திலனே!
அக மாடை மடந்தையர் என் றயரும்
சக மாயையுள் நின்று தயங்குவதே! 5

திணியான மனோ சிலைமீ துனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ?’
‘பணி யா?’ என வள்ளி பதம் பணியும்
தணியா அதிமோக தயாபரனே! 6

கெடுவாய் மனனே! கதி கேள்: கரவா(து)
இடுவாய்; வடிவேல் இறைதாள் நினைவாய்;
சுடுவாய் நெடுவேதனை தூள் படவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே. 7

அமரும் பதி, கேள், அகம் ஆம் எனும் இப்
பிமரம் கெட மெய்ப்பொருள் பேசியவா!
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம் பொரு தானவ நாசகனே. 8

மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டுசல்படும் பரிசென் றொழிவேன்!
தட்டூடற வேல் சயிலத் தெறியும்
நிட்டூர, நிராகுல, நிர்ப்பயனே! 9

கார் மா மிசை காலன் வரிற் கலபத்
தேர் மா மிசை வந் தெதிரப் படுவாய்;
தார் மார்ப! வலாரி தலாரி எனும்
சூர் மா மடியத் தொடு வேலவனே! 10

‘கூகா’ என என் கிளை கூடி அழப்
போகா வகை மெய்ப் பொருள் பேசியவா!
நாகாசல வேலவ! நாலு கவித்
த்யாகா! சுரலோக சிகாமணியே! 11

செம்மான் மகளைத் திருடும் திருடன்,
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இரு சொல் அற, என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே. 12

முருகன், தனிவேல் முனி, நம் குரு’ என்று
அருள் கொண் டறியார் அறியும் தரமோ?
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளி அன்றென நின்றதுவே. 13

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்(று)
உய்வாய் மனனே! ஒழிவாய் ஒழிவாய்
மெய் வாய் விழி நாசியொடும் செவியாம்
ஐவாய் வழி செல்லும் அவாவினையே. 14

முருகன், குமரன், குகன் என்று மொழிந்(து)
உருகும் செயல் தந்துணர்வென் றருள்வாய்?
பொரு புங்கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ! எண் குண பஞ்சரனே! 15

பேராசை எனும் பிணியிற் பிணிபட்(டு)
ஓரா வினையேன் உழலத் தகுமோ?
வீரா! முதுசூர் பட வேல் எறியும்,
சூரா! சுரலோக துரந்தரனே! 16

யாம் ஓதிய கல்வியும், எம் அறிவும்
தாமே பெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல் போய் அற மெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீர் இனியே. 17

உதியா, மரியா, உணரா, மறவா,
விதிமால் அறியா விமலன் புதல்வா!
அதிகா! அநகா! அபயா! அமரா
பதி காவல! சூர பயங்கரனே! 18

வடிவும், தனமும், மனமும், குணமும்,
குடியும், குலமும் குடிபோ கியவா!
அடி அந்தம் இலா அயில் வேல் அரசே!
மிடி என்றுஒரு பாவி வெளிப்படினே. 19

அரிதாகிய மெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா!
விரிதாரண! விக்ரம வேள்! இமையோர்
புரிதாரக! நாக புரந்தரனே! 20

கருதா மறவா நெறிகாண எனக்(கு)
இருதாள் வனசம் தரஎன் றிசைவாய்?
வரதா! முருகா! மயில்வா கனனே
விரதா! சூர சூர விபாடணனே! 21

காளைக் குமரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம் எய்தியவா!
பாளைக் குழல் வள்ளி பதம் பணியும்
வேளைச் சுர பூபதி மேருவையே! 22

அடியைக் குறியா தறியா மையினால்
முடியக் கெடவோ? முறையோ முறையோ!
வடி விக்ரம வேல் மகிபா! குறமின்
கொடியைப் புணரும் குண பூதரனே! 23

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன் அருள் சேரவும் எண்ணுமதோ?
சூர்வேரொடு குன்று தொளைத்த நெடும்
போர் வேல! புரந்தர பூபதியே! 24

மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்(து)
ஐயோ! அடியேன் அலையத் தகுமோ?
கையோ அயிலோ கழலோ முழுதும்
செய்யோய்! மயில் ஏறிய சேவகனே! 25

ஆதாரம் இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே!
வேதாகம ஞான விநோத மனோ
தீதா! சுரலோக சிகாமணியே! 26

மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயன் இங்கிதுவோ!
பொன்னே! மணியே! பொருளே! அருளே
மன்னே! மயில்ஏறிய வானவனே! 27

ஆனா அமுதே! அயில்வேல் அரசே!
ஞானா கரனே! நவிலத் தகுமோ?
யானாகிய என்னை விழுங்கி, வெறும்
தானாய் நிலை நின்றது தற்பரமே 28

இல்லே எனும் மாயையில் இட்டனை நீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே;
மல்லே புரி பன்னிரு வாகுவில் என்
சொல்லே புனையும் சுடர் வேலவனே! 29

செவ்வான் உருவில் திகழ் வேலவன் அன்(று)
ஒவ்வாத தென உணர்வித் ததுதான்
அவ்வா றறிவார் அறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே! 30

பாழ்வாழ் வெனும் இப்படு மாயையிலே
வீழ்வாய் என என்னை விதித்தனையே!
தாழ்வானவை செய்தனதாம் உளவோ?
வாழ்வாய் ! இனி நீ மயில் வாகனனே! 31

கலையே பதறிக் கதறித் தலையூ (டு)
அலையே படுமா றதுவாய் விடவோ?
கொலையே புரி வேடர் குலப் பிடி தோய்
மலையே! மலை கூறிடு வாகையனே ! 32

சிந்தாகுல இல்லொடு செல்வம் எனும்
விந்தாடவி என்று விடப் பெறுவேன்?
மந்தாகினி தந்த வரோதயனே !
கந்தா ! முருகா ! கருணா கரனே ! 33

சிங்கார மடந்தையர் தீநெறி போய்
மங்காமல் எனக்கு வரம் தருவாய்;
சங்க்ராம சிகாவல ! சண்முகனே !
கங்காநதி பால ! க்ருபாகரனே ! 34

விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க் கழல் என்றருள்வாய்?
மதிவாள்நுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விரதா ! சுரபூ பதியே ! 35

‘நாதா ! குமரா ! நம’ என் றரனார்
‘ஓதாய்’ என, ஓதிய தெப்பொருள் தான்?
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா ! குறமின் பத சேகரனே ! 36

கிரிவாய் விடு விக்ரம வேல் இறையோன்
பரிவாரம் எனும் பதம் மேவலையே
புரிவாய், மனனே ! பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே. 37

ஆதாளியை, ஒன்றறியேனை, அறத்
தீதாளியை, ஆண்டது செப்புமதோ?
கூதாள கிராத குலிக் கிறைவா !
வேதாள கணம் புகழ் வேலவனே ! 38

மாஏழ் ஜனனம் கெட மாயை விடா
மூ ஏடணை என்று முடிந்திடுமோ?
கோவே ! குறமின் கொடி தோள் புணரும்
தேவே ! சிவசங்கர தேசிகனே ! 39

வினை ஓட விடும் கதிர்வேல் மறவேன்;
மனையோடு தியங்கி மயங்கிடவோ?
சுனையோ டருவித் துறையோடு பசுந்
தினையோ டிதணோடு திரிந்தவனே ! 40

சாகா தெனையே சரணங் களிலே
கா கா, நமனார் கலகம் செயும் நாள்
வாகா ! முருகா ! மயில் வாகனனே!
யோகா ! சிவஞானொப தேசிகனே ! 41

குறியைக் குறியாது குறித் தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவற் றுலகோ டுறை சிந்தையும் அற்(று)
அறிவற் றறியாமையும் அற்றதுவே. 42

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா ! முருகா ! நினதன் பருளால்
ஆசா நிகளம் துகளாயினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே. 43

## நவவீரர்

# நவரத்தினக் கலிவிருத்தம்

### வீரவாகுதேவர் – மாணிக்கம்

சீர றாமுருக வேளுறை செழுமை
ஆர றாநிலய வாரியி லமரேண்
நார றாவுழுவ லேறிடு நலிவில்
வீர வாகுவெனும் வீரனை விழைவாம். 1

### வீரகேசரிதேவர் – தரளம்

என்னை யாளிறை யாயுல கெங்கணும்
மன்னு கந்தபி ரான்மந்தி ரத்திடை
மின்னு வாழ்க்கைய றாவீர கேசரி
தன்னை யுள்ளன்பிற் றாழ்வர்க்கின் றூழலே. 2

### வீரமகேந்திரதேவர் – புட்பராகம்

ஓதரும் வீரம கேந்திர னொருவன்
பாதமு ளேபடர் மாந்தர பரமீ
ஆதரம் வீயம தாந்தரங் கருதுஞ்
சூதம காமர மீர்ந்ததோ மரவேள். 3

### வீரமகேசதேவர் – கோமேதகம்

அரணத் திறையோ னையனா ரதமேன்
கரணத் தெணுவார் கவனூ றிடுவான்
முரணிற் பொருசூ ரனொடே முனைவோன்
சரணச் சுகவீ ரமகே சனரோ. 4

### வீரபுரந்தரதேவர் – வைடூரியம்

திகையெலா நீக்கமி லாது செறிந்தபெருந்
தகையெலா மேற்றவிர் சாமி பதம்பரவாப்
பகையெலா நீக்கொரு பாடு பிறந்துளுவார்
மிகையெலாம் வீட்டிடும் வீர புரந்தரனே. 5

### வீரராக்கததேவர் – வயிரம்

வீவயன மிலாமேல் வீட்டு நெறியை நேடும்
ஆவலறவர் வாழ்வா னாட்டுமுருக வேளின்
தாவிலருள்கொள் வீர ராக்கதனடி தாழ்வார்
தேவருமறி யாவோர் சீர்த்தியிலுயர் வாரால். 6

### வீரமார்த்தாண்டதேவர் – மரகதம்

தாமத மெற்றிடு மாசில் சார்ச்சேந்தன்
சேமவ டிக்களி யாமொர் சீர்ச்சார்ந்தோர்
மாமிடன் மிக்குடை வீர மார்த்தாண்டன்
பூமன நச்சுநர் போதம் போய்க்காண்பார் 7

### வீராந்தகதேவர் – பவளம்

மள்ளலே றேண்சிகி யிவரு மஞ்சனை
உள்ளுவோ ரோங்கவ னுணர்வு சந்ததங்
கொள்ளுவீ ராந்தக னினைவு கொண்டிடின்
தள்ளுவார் காண்கணத் தறுகண் யாவையும். 8

### வீரதீரதேவர் – நீலம்

ஆரெப்படி முனினும்மது போலத்திரு வருள்கூர்
நாரப்பெரு மானாயழ னாகப்பெய ரானாள்
தாரப்பொருள் வேலற்பணி தகைமைக்குண வீர
தீரப்பெய ரோனைப்புகழ் தெருளர்க்கிலை சிறுகே. 9

*கந்தசஷ்டி முதலிய மாவிரத வழிபாடுகளில் வழுத்துமாறு
பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளருளிச் செய்த
நவவீரர் நவரத்தினக்கலிவிருத்த முற்றிற்று.*

***கவிக்கொரு கர்ப்பூர தீபமேற்றுக.***
***குமரகுருபரன் றிருவடி வாழ்க.***

குமாரதாசன் என்னும் பெயரிய அத்தியாச்சிரம ஸ்ரீமத் பாலசுந்தர ஸ்வாமிகள் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் மீது இயற்றி அர்ச்சித்த

## சோடச நாமார்ச்சனை

ஓம் குமரகுருதாச குருப்யோ நம :

சுபே சோபனே முகூர்த்தே அத்ய சர்வ சுபதினே அஸ்மத் குருமூர்த்தே: அபராருணகிரி பாம்பன் ஸ்வாமின: பாதார விந்தயோ: அஸ்மதா தீனாம் பக்த ஜனானாம் ஸர்வாபீஷ்ட ப்ரதாத்ருத்வ ஸித்தியர்த்தம் ஸோடச நாமார்ச்சனம் கரிஷ்யாம:

ஓம் மஹா தேஜோ மண்டலாசார்ய ஸ்ரீமத் பாம்பன் குமரகுரு தாஸ ஞான தேசிகாய நம:

ஓம் ஜடா மஸ்தக காஷாயாம்பர பஸ்ம ருத்ராக்ஷதாரண திவ்ய மங்கள விக்ரஹாய நம:

ஓம் பாஹ்யாப் யந்தர விஷயாபிலாஷ சூன்ய, தன்ய புருஷாய நம:

ஓம் தமோ மண்டலாதி தூராய நம:

ஓம் ஹ்ருதயாம்போஜ மத்ய குஹ மந்திரானுபவ ரஸிகாய நம:

ஓம் பிரணவ பரம்பராகதாய நம:

ஓம் தகராலய ரகஸ்ய சாஸ்த்ர ப்ரதர்ஸகாசார்யாய நம:

ஓம் திருப்பா பாஷ்ய கர்த்ரேண் நம:

ஓம் ஏக பத்ய பஞ்ச விம்ஸத்யுத்தர ஸதபங்க்யா ப்ரதர்ஸித அமானுஷ சக்தி விஸ்மித பண்டித வந்திதாய நம:

ஓம் ஷண்முக கவசாதிக்ரந்த ப்ரவர்த்தகாய நம:

ஓம் ஷட்ஷஷ்டி, ஷட்ஸதோத்ர, ஷட்ஸஹஸ்ர பத்ய ப்ரதர்சித குமார பரமேஸ்வரைக ஸமர்ப்பித சித்தாய நம:

ஓம் பஹுமூர்த்தீனாம் பஹ்வீஸ்வர புத்யா வந்தனநிராகரண பூர்வக ஏகேஸ்வர குமாரகுரு வந்தனேன ஸர்வ தேவதா வந்தன ப்ரதர் ஸகாய நம:

ஓம் ஸ்வஸிஷ்யானாம் ஷடக்ஷர மந்த்ர தண்ட, த்யான கிரீடதானேனச முக்தி நகர ப்ரவேஸகாய நம:

ஓம் தன விருத்த, வயோ விருத்த, வித்யா விருத்த ஸேவித ஞான விருத்தாய நம:

ஓம் ஸ்வஸேவாகத ஸகலஜன துஃக நிவர்த்தகாய நம:

ஓம் ஸ்ரீ சென்னபுரிதக்ஷிண வான்மீகி தபப்ரஸாதித ப்ரணவாகார, மயூரபுர வாஸினே நம:

மஹாதேஜோ மண்டல குரு அபராருணகிரி அத்தியாச்சிரம சுத்தா த்வைத வைதீக சைவசித்தாந்த ஞானபாநு ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாஸ முனீந்த்ர சரணார விந்தயோ: நாநாவித பரிமளமந்த்ர புஷ்பாணிம் ஸமர்ப்பயாமி.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

## போற்றிவிண்ணப்பம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஐயனே யரசே போற்றி யருமறைப் பொருளே போற்றி
துய்யனே துணையே போற்றி தூமணித் திரளே போற்றி
மெய்யருள் விளைவே போற்றி வெற்றிவே லேந்து பூவற்
கையனே போற்றி யெங்கள் கடவுளே போற்றி போற்றி. 1

போற்றுவிண் ணவர்கோன் போற்றி புரிதவத் தொண்டர்க் கின்பம்
ஆற்றுநல் லழகன் போற்றி யாடுமம் பரியோன் போற்றி
நீற்றினைப் புனைந்த மேனி நிலவருட் குன்றம் போற்றி
சீற்றமெம் மேற்கொ ளாவோர் சிவசுப்பிர மணியம் போற்றி. 2

மணியணி மால்வி ரிஞ்சன் மற்றுள கணங்கள் யாவும்
பணியநின் றவனே போற்றி பரமனே போற்றி யன்பர்
அணியடி யலரே போற்றி யாக்கிநன் களித்து மாய்க்குங்
குணமுடை யத்தா போற்றி குமரவேள் போற்றி போற்றி 3

போற்றிவந் தாளு முன்றன் பொன்னடிக் கமலம் போற்றி
தேற்றுவா ருன்னை யல்லாற் றிக்குவே றில்லை போற்றி
மாற்றரும் பிறவிக் காட்டை மடிக்கமெய்ஞ் ஞானத் தீயை
ஏற்றுமெஃ குடையாய் போற்றி யெங்குறைதவிர்ப்பாய் போற்றி. 4

பாய்நதிக் கிடையோன் வாம பாகமே கொண்டா டன்னைத்
தாயென வுவந்தாய் போற்றி தனிப்பரஞ் சுடரே போற்றி
வீயிலாப் புத்தேண் மாதை வேட்டுமற் றொருத்திக் கன்று
நாயக னானாய் போற்றி நான்மறை முதல்வா போற்றி. 5

முதலுமாய் நாப்ப ணாகி முடிவுமாய் நின்றாய் போற்றி
சததள பாதா போற்றி சகச்சிர நாமா போற்றி
மதிபுனை பரம னார்க்கு மதலையாய்க் குருவாய்த் தேவர்
பதியென வுளவேள் போற்றி பரஞ்சுடர்க் கண்ணா போற்றி. 6

கண்ணுமாய்க் கருத்து மாகிக் காணெழி லெந்தை போற்றி
விண்ணுமாய் மண்ணு மாகி விளங்கருட் டேவே போற்றி
பண்ணவர்க் கருளத் தண்ட பாணியா நின்றாய் போற்றி
தண்ணருட் கடலே போற்றி சதுர்முகற் கிறைவா போற்றி. 7

இறைவனே போற்றி யாதி யெந்தையே போற்றி வேலுக்
கிறைவனே போற்றி நீப விணரணி சிவனே போற்றி
மறைபுக லரிய வெங்கண் மாதவ மணியே போற்றி
குறைவறு நிறைவே போற்றி குளிர்சிவக் கொழுந்தே போற்றி. 8

கொழுமையிற் குளிர்மை போற்றி குக்குடக் கொடியாய் போற்றி
குழுமிய சிவக ணங்கள் கும்பிடுங் கழலாய் போற்றி
தொழுபவர்க் கருள்வோய் போற்றி சுந்தரா போற்றி யென்னை
முழுதுமாள் பவனே போற்றி மோனநா யகனே போற்றி. 9

நாயக மானார்க் கெல்லா நாயக மானாய் போற்றி
தாயென வருவாய் போற்றி சண்முகத் தரசே போற்றி
தீயரிப் பெயரோற் கன்று தெய்வமுங் குருவு மான
நீயெனைக் கலந்தாள் போற்றி நித்தனே போற்றி போற்றி. 10

# பலகிரி

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்
பண் – பஞ்சமம்

கனைகழ னிலவிடு சததள விணையடி கருதிடு
 தவமுடையோர்
மனவெளி தனினட மிடுமர ஹரசிவ வடிவுடை யயிலரசே
பனிமலி யிதழவிழ் தொடைய லணிபெரும பலகிரி யுறைமுருகா
இனிமைசெய் புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 1

களிகிளர் முசுமுக னெனுநிரு பனரிய கடவுளர் கதியினுமேற்
கொளவரு ளினனென வழிபடும் விபுதர்கள் குலவுற வுளசிவனே
பளக வதரவுமை கரம்வள ரழகிய பலகிரி யுறைமுருகா
இளைமலி புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 2

அருமறை புகழ்நிறை குருபர மிதுவெனு மமைவொடு தினமுணர்வாய்ச்
சரவண பவகுக வெனவழி படுபவர் சனன மரணமறவே
பரிவுட னடிமைகொ ளகணித பசுபதி பலகிரி யுறைமுருகா
இருசுறு புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 3

துணிசெ யிரவிகுலவரச னொருவனுயர் சுசியொடு தபசுசெயாத்
திணிமணி மதுரையி னரனது தொழினனி செயவென நசைஇயவா
பணிய குமரகுரு பிரணவ வுருவொளிர் பலகிரி யுறைமுருகா
இணையறு புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 4

இலகு கயனயன வுமையனு தினம்வள ரிளைமலி மணி மதுரைப்
புலவர்க டலைவனை யறுமுக வருணெறி புகவரு ளியபரனே
பலநவ மணிநிறை வளமுட னுயரிய பலகிரி யுறைமுருகா
இலவச வளியுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 5

நடமயின் மிசையொரு சுடர்மணி யெனவரு நவசபை களின்முதல்வா
தடவிடின் னிசைமுனி பகிரத னடிமைகொள் சமரச நிலையிறைவா
படமுடை மணியர வணிபவர் மனமகிழ் பலகிரி யுறைமுருகா
இடரறு புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 6

சகல கலைகளையு முணர்வுறு வலிமலி தவமிகு குறுமுனியைச்
சுகுர்த வடிமைமுறி கொளுமொரு குருபர சுருதிகள் புகழ்சிவனே
பகநிறை சரவண பவமறை யவர்புகழ் பலகிரி யுறைமுருகா
இகழ்வறு புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 7

புதுமல ரளக வனிதையரும் விழைவுகொள் பொருவறு குறமயிலாள்
அதிமது ரவரவ ரசநுகர் தலைவவொள் ளமுதவி புதர்பரனே
பதும நனைநிரைக ளவிழும் வளமொழுகு பலகிரி யுறைமுருகா
இதமிகு புரிவுட னெனையு மடிமை கொளவி துநல தருணமரோ. 8

வியனென வெயில்விரி விமலர் கயிலைமலை மிசைநிறை
கொலுவுடையோய்
மயறெறு கவுணியன் விடமமு தெனநுகர் வலியுள னழகுடையான்
பயிறமி ழணிபுனை பசுபதி யுடன்மொழி பலகிரி யுறைமுருகா
இயல்புறு புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 9

முரணறு புகழ்சொன வருண கிரியைநிஜ முடிபுடை யறிஞனெனத்
தரணிய ருவணையர் புகழ வருளினவொர் தகரவெ ளியிறைவனே
பரவரு நெடுவள மலிய முகில்கள்கவி பலகிரி யுறைமுருகா
இரிபறு புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 10

## பிழைபொறுக்க முறையீடு

முத்தரின் முதல்வா முதுமொழித் தலைவா
முட்டிலா வனப்பது பொதுளும்
சித்திர வடிவே திகழருங் குழகா
செங்கையி னன்கயி லுடையாய்
மத்தமு மெழிலா ரறுகும்வில் லுவமு
மதலையு மணிபவர் மழவா
பித்தனேன் குறைதீர்த் தருள்சிவ னேயென்
பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 1

கீணமில் பொருளே கிளரொளிப் பிழம்பே
கிருபைசேர் கற்பகக் காவே
மாணவர் சிரமேற் கரங்களைக் குவித்து
வணங்கிட வருசிவக் கொழுந்தே
ஆணவங் குடிகொண் டருடனை மறந்திங்
கனுதின மனுசிதஞ் செறியப்
பேணிய கொடியே னின்சரண் புகுந்தேன்
பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 2

பத்தருக் கேமம் பொழியருட் குயினே
பரமமெய்ஞ் ஞானிக ளுளத்தே
நித்தலும் ருசிக்குஞ் சருக்கரைக் குவடே
நேயமா லயன்முத லோர்தாம்
சித்தசன் னதமே கொளப்பொறி யிசைத்த
செம்மலே யெங்குல வாழ்வே
பெத்தனே னுன்சே யானதா லினியென்
பிழைபொறுத்தாள்வதுன் கடனே. 3

கன்னலே யிழுதே கற்கண்டே தேனே
    கனிந்தமுக் கனிரச மேயின்
மன்னய விளைவே யமுதமே யொழியா
    மதுரமே சீனிச்சக் கரையே
என்னுளத் தியங்கு மிறையெனுங் குருவே
    யெந்தையே திருத்துணை கிடைத்த
பின்னுநிற் கேற்காப் பிசிதனை நவின்றேன்
    பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 4

பங்கய னரன்மால் பண்ணவ ரிமவான்
    பந்தனை யேனை மூர்த் திகளும்
கங்குலும் பகலும் வினோத வைம் பூத
    கருமமு முனையன்றி யுண்டோ
எங்களுக் கயலோர் புரிபுகர் பொறுப்ப
    தெங்களு ளுண்டது பொருவப்
பிங்கல வயிலோய் பரிக்கை பண் ணாதென்
    பிழை பொறுத் தாள்வதுன் கடனே. 5

மாலயற் கரிய வரையெனத் திமிர்ந்த
    மதிக்கிடைத் தாணுவுக் காதி
நூலின்முன் மூல நொடித்தகத் தியற்கு
    நுவன்றநற் பரமபுங் கவனே
வேலினுக் கிறையே குறத்திதன் றுரையே
    வினயவிண் ணவர்கள்பண் ணவனே
பீலியி லிவருஞ் சிவபெரு மானே
    பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 6

வீசிடு துளக்க ஞெகிழியந் தாளா
    விண்குடி யேற்றிய வீரா
தாசர்வெம் பவத்துட் டிளைத்திடா வண்ணந்
    தடைபுரிந் தாளரு ளாளா
ஆசைகொள் பாழ்த்த நினைப்பினுள் ளயர்வே
    னதிகமு மேழையே முனிந்து
பேசிய நீதா னெனைக்கைவி டாதென்
    பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 7

அடியவர்க் கெளியா னென்றுனை முதுநூ
    லனைத்துநன் கெடுத்தெடுத் ததிர்த்த
படியெனை யொருதொண் டாயெண்ணி யிதுநாள்
    பணித்ததி னில்லெனச் சொனதால்

கொடியவ னெனினுந் தவக்கமில் லாமற்
    கூடுவ னுன்னருட் பவுள்சைப்
பிடிதவ றாதோர் நிலைகொள்ள வேயென்
    பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 8

துள்ளுமா மயின்மீ தேறுவிண் ணவனே
    தொழுமடி யார்கள்பி ரானே
கள்ளையார் கழுநீர்த் தொடையிறை நாயேன்
    கருத்தைவிட் டகலாக் கருத்தே
பிள்ளைசெய் யடக்கோ தனைத்தையும் பொறுமைப்
    பிதாசமித் தணைப்பது கடுப்பப்
பிள்ளையென் றுனக்கே யடைக்கல மாமென்
    பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 9

நேசமுற் றோர்பா னிறையுநல் லறிவே
    நினைவினி லெழுந்தொளிர் சுடரே
மாசினல் லருணா சலத்தவ னிறையே
    மலரடி பணிகும ரகுரு
தாசனைக் காப்போ னானெனுந் தேவே
    சரவண பவசிவ குகனே
பேசிய பேச்சா னானிங னிழைத்த
    பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 10

## திருப்புகழ் (திருவாவினன்குடி)

தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன தனதான

நாத விந்துக லாதீ நமோநம
    வேத மந்த்ரசொ ரூபா நமோநம
    ஞான பண்டித ஸாமீ நமோநம வெகுகோடி

நாம சம்புகு மாரா நமோநம
    போக அந்தரி பாலா நமோநம
    நாக பந்தம யூரா நமோநம பரசூரர்

சேத தண்டவி நோதா நமோநம
    கீத கிண்கிணி பாதா நமோநம
    தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ

தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்

ஈத லும்பல கோலா லபூஜையும்
ஓத லுங்குண ஆசா ரநீதியும்
ஈர முங்குரு சீர்பா தசேவையு மறவாத

ஏழ்த லம்புகழ் காவே ரியால்விளை
சோழ மண்டல மீதே மநோகர
ராஜ கெம்பிர நாடா ளுநாயக வயலூரா

ஆத ரம்பயில் ஆரூ ரர்தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதே றிமாகயி லையிலேகி

ஆதி அந்தவு லாஆ சுபாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவி னன்குடி வாழ்வா னதேவர்கள் பெருமாளே.

## திருக்கந்தர் திருப்பல்லாண்டு

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்
பண் – பஞ்சமம்

பொன்னுயர் நாட்டிறை புத்திரி தனைமன்றல்
புரிந்துசெந் தினைகாத்த
மின்னினை மாமணஞ் செய்தரு ணாடிய
வித்தகர் தமையாண்டு
நன்னல நல்கருள் வேந்தென விளங்குபு
நான்மறை களும்விரித்துப்
பன்னரும் பரமென விருக்குநந் தேவுக்குப்
பல்லாண்டு கூறுதுமே. 1

மூப்பறு கட்டிள மைத்திரு மேனியு
மூப்புடை யார்க்கெல்லாம்
மூப்புடை மேன்மையு மூப்புடை யாவிகண்
முழுவது மூப்பிளமை
யாப்பறு மாறெமை யாள்கும ராவென
நாடிறை மையுமல்கு
பாப்பணை யான்மரு மானெனும்
வேலற்குப் பல்லாண்டு கூறுதுமே. 2

நீர்வள மார்பரங்குன்றிலு நீடெழி
    னிமிர்திருச் செந்திலிலும்
சீர்வள மார்திரு வேரகந் தன்னிலுந்
    தீதறு பழநியிலும்
ஏர்வள மார்திருச் சோலையங் கிரியிலு
    மிருந்தடி நினைவார்க்குப்
பார்வள மேல்வள நல்கருட் குகனுக்குப்
    பல்லாண்டு கூறுதுமே. 3

தணிகைகந் தாசலஞ் சமரா புரிதிருச்
    சயிலமி லஞ்சியறா
அணிகெழு வேள்வியங் கிரிபொதி யாசல
    மரிப்பா டுடுப்பைமகா
திணியகத் தேவைசெங் கோடுகுன் றக்குடி
    திருவுரு மலையாரூர்
பணியுயர் கூடலம் பதியுறை குகனுக்குப்
    பல்லாண்டு கூறுதுமே. 4

சித்தர்கள் காண்கதிர் காமமண் ணாமலை
    சீசயி லங்கயிலை
எத்தவ ரும்புகழ் மேரு சிராசல
    மோர்த்திரு நீற்றுமலை
உத்தம நீள்கழு கோதியெண் கண்ணெனு
    மொண்டலங் களின்மேவிப்
பத்தருக் கருள்புரி கின்றசெவ் வேளுக்குப்
    பல்லாண்டு கூறுதுமே. 5

நேசர்கள் வாழெழின் மயிலவொண் மாதிர
    நீர்மலி பெரும்பேறு
கோசரர் சூழ்கந்த கோட்டங் குமாரவொண்
    கோட்டநல் வேற்காடு
மாசில்கு மாரபு ரம்பெரு வயலிரு
    கொடுமளூர் வதிந்தடியார்
பாசறை தீர்த்தருள் புரிமுரு கோனுக்குப்
    பல்லாண்டு கூறுதுமே. 6

துப்புறு பூண்டிபுள் வேணகர் வேனகர்
    தூயவர் புகழாண்டார்
குப்பமி றாதபொ னம்பல மெனவே
    குயினில யங்களிலும்

ஒப்பக நாடுகள் காடுகள் கீழ்மே
லுலகுயிர்த் திரள்களிலும்
பப்புவர் மீக்கூ றிடநிறை குகனுக்குப்
பல்லாண்டு கூறுதுமே. 7

கட்சியி லேபடுத் துத்துயில் கொண்டிருட்
காரியி னுங்கொடிய
அட்சிகண் மோகன மாழ்ந்துள வாயுளை
யவம்பணி யவியாமல்
வெட்சியுங் கோடையு மணிதிரு மொய்ம்புகள்
விளங்கிட மென்றூவிப்
பட்சியில் வருமுரு கோனெனு மாதிக்குப்
பல்லாண்டு கூறுதுமே. 8

எண்ணுந ரெண்ணம தோர்ந்தரு ளேந்தலு
மிரவொடு பகலிறந்த
கண்ணர்கள் பின்றொடர் காதலுள் ளானுமொர்
காலமு மிடர்நாசம்
நண்ணுத லில்லுயர் பெருந்திற லோனுமெஞ்
ஞாலமு நினைவொன்றால்
பண்ணிடு மீசனு மாயுள்ள குகனுக்குப்
பல்லாண்டு கூறுதுமே. 9

அன்னையின் மேம்படு கருணையி னாற்குக
னடிகளைப் புகழ்தாசன்
தன்னைமெய் யடியவ னாக்கவென் றகம்புறஞ்
சார்ந்துவந் தேற்றமதி
சொன்னவ னாயனு பூதிசொன் னவற்குறு
சூரறுத் தெவராலும்
பன்னவொ ணாநல நல்கிய குகனுக்குப்
பல்லாண்டு கூறுதுமே. 10

## வாழ்த்து

விழுமிய பொருளாய் நாளும் மிளிர் குகக் கடவுள் வாழ்க
குழுமிய தொழும்பர் வாழ்க குருவுடன் சீடர் வாழ்க
தொழு குலத்தவர்கள் வாழ்க துகளறு தவங்கள் வாழ்க
வழுவறு மறையும் ஆகமமுஞ் சொன முடிவு வாழ்க.

## மஹாதீபம்
## ஸ்ரீமத் –குமாரதந்த்ரம் மந்திரோத்தார படலத்தில் வருதியானம்

அஸுரகுல மர்த்தநாய யோகாய யோகாதிபதயே
சாந்தாய சாந்தரூபிணே சிவாய சிவநந்தநாய
ஷஷ்டீப்ரியாய ஸர்வஜ்ஞாந ஹ்ருதயாய ஷண்முகாய
ஸ்ரீம் ஸ்ரீம் ஹ்ரீம் க்ஷம் குஹரவி கங்காலாய காலரூபிணே
ஸுரராஜாய ஸுப்ரஹ்மண்யாய நம:

## கட்டியம்

ராஜாதி ராஜ ராஜ பரமேச்வர குமார பகவானுக்கு ஜய
தேவாதி தேவ தேவ பரமேச்வரசிவஸுப்ரஹ்மண்யனுக்கு ஜய
ஸ்ரீவல்லி தேவசேனா சமேத சர்வ சுப லக்ஷணனுக்கு ஜய
ஞான சக்திதர ஞானப்பிரகாச சுவாமிக்கு ஜய
குக்குடத் துவஜ ஹஸ்த வஜ்ர பாணிக்கு ஜய
மயூரவாகன மகாகிருபாநிதிக்கு ஜய
அருணகிரிநாத ஆனந்த பராபரனுக்கு ஜய
மஹாதேஜோ மண்டலத்தாரைக் காத்தருள் கடவுளுக்கு ஜய
பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளுக்கு ஜய

## இறை ஆசி பெறுதல்

### திருக்கந்தகிரித் திருவிளையாடல் (முதற்பத்து)

வேத நாயக நவிர நாயக வேலின் நாயக விந்துமா
நாத நாயக வள்ளி நாயக, யானை நாயக நின் திருப்
பாதமே உயிர் அடையும் இன்பது பற்றும் நான் உன் அடைக்கலம்
ஆதலால் எனை இடையறா அருளால் விழைந்து புரந்தருள்.

திருச்சிற்றம்பலம்.

* * *

## திருவருட்கோலத் தியானம்

கரத்தி லமர்வேலுங் கட்டழகார் மொய்ம்பிலணி கடம்பு மாறு
சிரத்தி லவிர்முடியுந் தேசுசெறி காதணியுந் திகழ மாசில்
உரத்தி லணிபுரள வொளிர்தேவி யிருவரொடு
வரத்தை யருள்குகனேர் வரினெற்குங் கருக்கட்டு வருவ துண்டோ.

– பல்சந்தப்பரிமளம்

---

## காசியாத்திரை

இவ்வருடக் கந்தசட்டி யேதமற முற்றுமென
வெவ்வருள ருந்துதிக்கு மீசாவென் – றெவ்வினெஞ்ச
மெண்ணியதற் கோரிடையூ றென்கணொரு நோயாயிற்
பண்ணியிடல் யாது பகர். 242

சேந்தவனே சேந்தவனே சேவடியீ யென்பவர்கட்
போந்தவினை சீத்தருளும் புண்ணியனன் – பாந்தயவா
லிவ்வருடச் சட்டி யினிது நடந்ததிவ்வா
றவ்வருளும் வந்து கொள்க வார்ந்து. 244

---

# சண்முக நாமாவளி

| | | | |
|---|---|---|---|
| ஹரஹர | சிவசிவ | சண்முக | நாதா |
| ஹரஹர | சிவசிவ | வென்முக | நாதா |
| ஹரஹர | சிவசிவ | பரம | விலாசா |
| ஹரஹர | சிவசிவ | வபய | குகேசா |
| அருண | கிரிபரவு | மருணெறி | நாதா |
| தரும | வுறுவர்புகழ் | சததள | பாதா |
| அரிபிர | மாதிக | டொழுவடி | வேலா |
| திருவடி | நாரவ | ருளமுறை | சீலா |
| எனினிய | குருநித | மெனுமதி | யீசா |
| சனனவெய் | தறவளி | தருபர | மேசா |
| பாசா | பாச | பாப | விநாசா |
| மாசே | றாத | மான | நடேசா |
| போஜா | வாஜா | பூஜகர் | நேசா |
| தேஜா | ராஜா | தேவஸ | மாஜா |
| தீஞ்சுவை | யருளொரு | திருவா | ரமுதே |
| ஓஞ்சர | வணபவ | வுருவே | யருவே. |